**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 362/2022 |
| Prosecution Witness | : | அ.சா.5 |
| Name | : | ராஜேஷ்குமார் |
| Father's/Husband Name: | : | ராஜேந்திரன் |
| Address : | : | டி ஏந்தல், திட்டகுடி தாலுகா, கடலூர் மாவட்டம். |
| Age | : | 42/2023 |

தேதி: 10/01/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **( எதிரி ஆஜர் இல்லை/ குவிமுச பிரிவு 317 ன் கீழ மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

1. நான் தற்போது பிரியம் தனியார் மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு எங்களது மருத்துவமனையில் ராஜா என்ற மருத்துவர் உதவி மருத்துவராக பணியாற்றினார். எங்களது மருத்துவமனையில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 07/11/2021 அன்று அவர் மருத்துவமனையில் பணியில் இருந்த போது மாலை 5.30 மணியளவில் பிரசன்னா த/பெ.செந்தில்குமார் என்ற 17 வயது மதிக்கத்தக்க சிறுவன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு 07/11/2021 அன்று மதியம்

2.00 மணிக்கு சாலை விபத்தின் மூலம் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறினார். மேலும் அப்போது சுயநினைவுடன் இருந்தார்.

1).வலது காலில் தொடை எலும்பு முறிந்திருந்து காணப்பட்டது.

2).வலது கால் கட்டை விரலில் உள்ள எலும்பும் முறிந்து காணப்பட்டது. அவரை எங்கள் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. சிறுவனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அந்த மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் காயச்சான்று அவரால் வழங்கப்பட்டது தான். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.2.**

**3. அன்றைய தினமே** அவர் மருத்துவமனையில் பணியில் இருந்த போது மாலை 6.30 மணியளவில் ஹரிஹரன் த/பெ.கலியமூர்த்தி என்ற 16 வயது மதிக்கத்தக்க சிறுவன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு 07/11/2021 அன்று சாலை விபத்தின் மூலம் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறினார். மேலும் அப்போது சுயநினைவுடன் இருந்தார்.

1).வலது காலில் தொடை எலும்பு முறிந்திருந்து காணப்பட்டது.

2).வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

3).வலது காலில் நான்காம் விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

Legal

அவரை எங்கள் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. சிறுவனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அந்த மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் காயச்சான்று அவரால் வழங்கப்பட்டது தான். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.3.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்டதாக கூறப்படும் இருவருக்கும் நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். சிகிச்சை அளித்த மருத்துவர் அழைத்து விசாரித்தால் தான் என்ன காயம் ஏற்பட்டது என தெரியவரும் என்றால் சரிதான். இரண்டு காயச் சான்றுகளிலும் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என எந்தவித விளக்கமும் இல்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு வந்த போது நோயாளிகள் சுய நினைவுடன் இருந்தார்களா என்றால் எந்த விவரமும் இந்த சான்றுகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரசன்னா மற்றும் ஹரிஹரன் ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் தான் என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கொடுங்காயம் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.